26 மே
சென்னை-600 025

சுருக்கம்

உயர்கல்வி – 2010–2011–ஆம் கல்வியாண்டுமுதல் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களில் முதல் கட்டமாக அமைப்பியல் (Civil), இயந்திரவியல் (Mechanical) ஆகிய இரு பாடப்பிரிவுகளையும் தமிழில் பயிற்றுவிக்கவும் – பொறியியல் பட்டப்படிப்புக்கான பல்கலைக்கழக வினாத்தாள்கள் ஆங்கிலம் மற்றும் தமிழில் இருக்கவும் விடைகளை ஆங்கிலம் மற்றும் தமிழில் எழுதும் முறையை அறிமுகப்படுத்தவும் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.103 நாள் 19.5.2010.

19910 5329/2010

வைகாசி 5,
திருவள்ளுவர் ஆண்டு 2041.

ஆணை:

19.3.2009 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் தாக்கல் செய்த, 2010–2011–ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பிற அறிவிப்புகளுடன், கீழ்க்கண்ட அறிவிப்பும் வெளியிடப்பட்டது:-

"அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு மாணவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு பயிலும் வசதி, வரும் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்படும்"

2. மேலும் 22.4.2010 அன்று நடைபெற்ற உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்:-

"2010–ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோயம்புத்தூரில் சிறப்புற நடைபெறவிருக்கிறது. இந்த சிறப்பு வாய்ந்த தருணத்தில், அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களில் அமைப்பியல், இயந்திரவியல் ஆகிய பாடப்பிரிவுகளில் மாணவர்கள் தமிழ்மொழி மூலமாக கற்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இவர்களுக்கான புத்தகங்கள் தமிழ் மொழியில் தயாரிக்க தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது பொறியியல் பட்டப் படிப்புக்கான பல்கலைக்கழக வினாத்தாட்கள் ஆங்கிலத்தில் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன. விடைகளும் ஆங்கிலத்தில் மட்டும்தான் எழுதப்பட வேண்டும் என்ற நிலை இருந்து வருகிறது. இனி வருங்காலங்களில் வினாத்தாட்கள் ஆங்கிலம் மற்றும் தமிழில் இருக்கும்படியும், விடைகளை ஆங்கிலம் அல்லது தமிழில் எழுதும் முறையை அறிமுகப்படுத்துவது குறித்தும் பல்கலைக்கழகங்களுக்கு அறிவுறுத்தப்படும். இத்திட்டம், மேல்நிலைக்கல்வியை தமிழ் வழியில் படித்து, பொறியியல் கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு நல்ல பயனை அளிக்கும்".

GO File
26/5/10

..2.

3. மேற்காண் அறிவிப்புகளை 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது. 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல், பொறியியல் பட்டப்படிப்புக்கான பல்கலைக்கழக வினாத்தாள்கள் ஆங்கிலம் மற்றும் தமிழிலும் இருக்க வேண்டும் என்றும், விடைகளை ஆங்கிலம் அல்லது தமிழில் எழுதும் முறையை அறிமுகப்படுத்தவும், தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழக பதிவாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
பதிவாளர், அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சென்னை / திருச்சிராப்பள்ளி / கோயம்புத்தூர் / திருநெல்வேலி.
பதிவாளர்கள், அனைத்து பல்கலைக்கழகங்கள்.
நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அனைத்து பொறியியல் கல்லூரிகள் (தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25 வழியாக)
முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9.
உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
உயர்கல்வித்துறை, சென்னை–9 (அனைத்துப் பிரிவுகள்)
இ.கோ / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.